**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.9/2020** |
| Sessions : | | | |
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 5** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | பழனிசாமி | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **18.11.2025**

**3, 5, 12 எதிரிகள் ஆஜரில்லை. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது குன்னம் வட்டாட்சியர் அலுவகத்தில் தலைமைஎழுத்தர் துணை வட்டாட்சியராக பணிசெய்கிறேன். கடந்த 13.12.2014ம் தேதி வேப்பந்தட்டை தாலுக்கா வாலிகண்டபுரம் கிராமத்தில் கிராமநிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது மதுவிலக்கு ஆய்வாளர் என்னிடம் போலி மதுபானம் தயார் செய்து விற்பனை செய்வதாக தகவல் வந்து சென்னை – திருச்சி ரோட்டில் உள்ள வாலிகண்டபுரம் கிராமத்தில் ஆர்.எஸ் மகால் அருகில் பாஷாவெல்டிங் பட்டறையில் போலிமதுபானம் தயார் செய்து விற்பனை செய்வதாகவும், அந்த விற்பனைக்குபயன்படுத்திய வாகனம் மற்றும் அது தயாரிக்க தேவைப்படும் மூலப்பொருள், லேபிள், கலக்கிறபொருள் ஆகியவற்றை அந்த இடத்தில் உள்ளது என்றும், அதை கைப்பற்ற போகிறோம் என்றும், இதுதொடர்பாக நானும், என்னுடைய கிராமஉதவியாளரையும் உதவி செய்யுமாறு சொன்னார். அதன்பிறகு நானும், உதவியாளரும் அங்குபோனோம். அங்கு Green Magic என்ற பெயரில் தயாரிக்கபட்ட மதுபாட்டில்களை வெளியே

எடுத்துசெல்வதற்கு 6 லாரிகள், டாடா சுமோ ஒன்று, பொலிரோ வாகனம் ஒன்று, 2பைக்குகள் அதில் ஒன்று புல்லட் மற்றொன்று ஹோண்டா ஆகியவற்றை கைப்பற்றினோம். அப்போது செல்வம் த/பெ. கணபதி மற்றும் 8 நபர்கள் ஆதி, மணிவேல், மாணிக்கம், சுரேஷ், மற்றவர்கள் பெயர் ஞாபகமில்லை, ஆகியோர்கள் போலிமதுபான தயாரிப்பில் ஈடுபட்டதாக வெற்றிவேல் த/பெ. சரவணன் அடையாளம் காட்டினார். செல்வம் அப்போது வாக்குமூலம் கொடுத்தார். அவர் வாக்குமூலம் கொடுக்கும்போது நான் உடனிருந்தேன். மொத்தம் 11 மகசர்கள் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் எதிரி செல்வத்தின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.16, போலிமதுபானம் தயாரித்து வண்டிகள் மூலம் வெளிமாநிலங்களுக்கு விற்பனை செய்வதாக சொன்னார். வண்டி எண்கள் ஞாபகமில்லை. மொத்தம் 11 வாகனங்கள் ஆகும். காவல்ஆய்வாளர் தயாரித்த மகசரில் நான் கையெழுத்து செய்தேன். வாகனங்கள் மற்றும் போலிமதுபானம் தயாரிக்க தேவையான பொருட்களை கைப்பற்றியதற்கு தயாரித்த 11 மகசர்களில் நான் கையெழுத்து செய்தேன். அந்த மகசர்கள் என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.14. அந்த வானங்களில் 6 வாகனங்கள் ஈச்சர் வாகனங்கள் ஆகும். அந்த வாகனத்தில் இருந்து 650மில்லி மதுபாட்டில்கள், 180மில்லி மதுபாட்டில்கள், 35லிட்டர் கொள்ளளவு உள்ள வெள்ளை கேன்கள், மதுபானம் தயாரிப்பதற்கான மூலபொருட்கள் திராவகத்தை கைப்பற்றினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் இதற்கு முன்பு பலவழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் இன்றைய வாய்தாவிற்கு சார்வான சம்மனில் உள்ளது என்னுடைய கையெழுத்தாகும். கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள என்னுடைய கையெழுத்திற்கும், சம்மனில் உள்ள என்னுடைய கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் கொஞ்சம் வித்தியாசம் உள்ளது. சாட்சி 10வருடம் ஆகிவிட்டது என்று கூறுகிறார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய

கையெழுத்தில் வித்தியாசம் உள்ளது என்றால் கையெழுத்து என்னுடையதான். கையெழுத்துகளை நிபுணர்களின் பரிசோதனைக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபணை இல்லை. 11 மகசர்களில் எந்த மகசரில் எந்த பொருளை எத்தனை மணிக்கு கைப்பற்றினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லஇயலாது. நான் முதல்விசாரணையில் சொன்னபடி எந்த எதிரியும் என்முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதன்அடிப்படையில் எந்த பொருட்களும் மகசர்களில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்துபின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றும், அதனால் தான் என்னுடைய கையெழுத்துக்கள் ஒவ்வொரு ஆவணத்திலும், ஒவ்வொரு விதமாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் காவல்துறையினரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையின் போது எத்தனை மணிக்கு என்னை அழைத்தார் என்று நேரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு எதிரிகளுக்கும், சம்பவத்துக்கும் எந்த தொடர்பும் இல்லையென்றும், புள்ளி விவர கணக்கிற்காக போலிசார் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.